# கொடைக்கானல் கோட்ட மாவட்ட வன அலுவலரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்.திரு .யோகேஷ் குமார் மீனா இ.வ.ப.
மாவட்ட வன அலுவலர் (ம) வன உயிரின காப்பாளர், கொடைக்கானல்.

செ.மு.ஆ.எண். 6518 /2019/ப3 நாள். 21.07.2023

பொருள் : பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு.கே.கொண்டுசாமி, வனவரின் மகள் திருமதி.கே.சாரதா என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது - தற்காலிக பணியினை வரன்முறை செய்து ஆணை வெளியிடுவது - தொடர்பாக

பார்வை :
1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.ண2/18995/2015 நாள் 06.08.2019
2. தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் மண்டலம் ந.க.எண்.6548/2019/ப1 நாள் 20.08.2019
3. மாவட்ட வன அலுவலர்(ம) வன உயிரினக்காப்பாளர், கொடைக்கானல் வனக்கோட்டம் செ.மு.ஆ.எண்.6518/2019/ப3 நாள் 16.09.2019 மற்றும் 22.01.2021
4. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ1) துறை நாள் 08.03.2023
5. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்)சென்னைந.க.எண்.ண2/19226/2022 நாள் 12.06.2023

*****

**ஆணை:**

திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் வனக்கோட்டத்தில் வனவராக பணியாற்றி வந்தபொழுது 04.03.2006 அன்று திரு.கே.கொண்டுசாமி, வனவர் பணியிடை மரணமடைந்ததால் அவரது மகள் திருமதி.கே.சாரதா வனத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக 20.09.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் மேற்படி இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்து கோரி பார்வை 3ல் காணும் 22.01.2021 தேதி கடிதப்படி திண்டுக்கல் மண்டல தலைமை வனப்பாதுகாவலர் மூலமாக முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள் 08.03.2023ன்படி பின்வரும்வாறு **TamilNadu Government Gazette** வெளியிடப்பட்டுள்ளது.

**16. Regularization of appointment – Each appointing authority shall regularize the service of the person appointed under these rules within a period of one year from the date of his joining service. Subject to eligibility.**

மேலும், பார்வை 5ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள் 08.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விதித்தளர்வு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறை செய்து அறிக்கை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் கருணை அடிப்படை பணி நியமனத்திற்கு மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேவையான சான்றுகள், வயது, தகுதிகள் போன்றவற்றினை மறு பரிசீலனை செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை நாள் 08.03.2023-ஐ செயல்படுத்தும் விதமாக திருமதி.கே.சாரதா, இளநிலை உதவியாளருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2019 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

21/7/23

மாவட்ட வன அலுவலர் மற்றும்
வனஉயிரின காப்பாளர்
கொடைக்கானல் வனக்கோட்டம்
கொடைக்கானல்

பெறுநர்

திருமதி.கே.சாரதா, இளநிலை உதவியாளர், மாவட்ட வன அலுவலகம், கொடைக்கானல் வனக்கோட்டம்

மேற்படி ஆணையினை பெற்று கொண்டு அதன் இரண்டாம் பிரதியில் ஒப்புகையிட்டு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: செயல்முறை ஆணை இருப்புக்கோப்பிற்கு

நகல்: உபரி